# வாசிப்பை ஊக்குவிப்பதில் சுன்னாகம் பொது நூலக சிறுவர் பகுதியின் செயற்பாடுகள்

சு.ஜெயலக்சுமி*

**அறிமுகம்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கீழ் சுன்னாகம் பொது நூலகமானது இயங்கி வருகின்றது. இந்நூலகமானது தரம் II நிலையிலுள்ளது. இன்றைய உலகம் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினால் நவீனமயமாக்கலுக்கு உட்பட்ட சமூகங்களைக் கொண்டுள்ளது. இச் சமூகங்களில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து, வேறு பல புதிய விடயங்களில் மக்கள் தமது நேரத்தை செலவிடுகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் இணையத்தளங்களில் மூழ்கி இணைய விளையாட்டுக்களில் தமது நேரத்தினை செலவிடுகின்றனர். எனவே, சமூகத்தினைச் சீர்ப்படுத்த சிறுவயதிலிருந்தே வாசிப்புப்பழக்கத்தினை ஊக்குவிக்க வேண்டும். அத்துடன், தற்போதைய கல்வி முறைமைகளினாலும் வாசிப்பு செயற்பாடுகள் குறைவடைந்து செல்கின்றன. அதனை நிவர்த்தி செய்து வாசிப்பு பழக்கத்தினை அதிகரித்தல் அவசியமாகின்றது. ஆரம்பத்தில் இந்நூலகத்தின் சிறுவர் பகுதியில் 463 அங்கத்தவர்கள் இருந்துள்ளனர். அடிப்படை வளங்களுடன் செயற்பட்ட சிறுவர் பகுதியினை கவர்ச்சிகரமாக மாற்றி சிறார்களை வாசிப்பின் மீது நாட்டம்கொள்ள செய்வதற்கும் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமானது நவீன கற்றல் முறைகளுக்கேற்ப தரமான சிறுவர் நூலகத்தினை அமைத்து இப்பிரதேச சிறார்களின் வாசிப்பு பழக்கத்தினை மேம்படுத்துதல் ஆகும்.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

சுன்னாகம் பொதுநூலகச் சிறுவர் பகுதி ஆரம்பத்தில் அடிப்படை வளங்களுடன் மாத்திரமே காணப்பட்டது. அதாவது சிறுவர்களை கவரக்கூடிய நூல்கள் குறைவாகவும், தளபாடங்கள் சாதாரணமாகவும் காணப்பட்டன. 2018ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் இன்று பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. சிறார்களைக் கவரும்வண்ணம் சுவர்கள், தளபாடங்கள் வர்ணம் பூசப்பட்டு புதுப்பொலிவுடன் உருவாக்கப்பட்டது. அத்துடன் சுவரோவியங்களும் இப்பிரதேச ஓவியராலேயே வரையப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் சிறுவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளபபட்டு வருகின்றன.

**பொம்மை நூலகத் திட்டம்**

நூல்கள், சஞ்சிகைகளுடன் மட்டுமன்றி, பொம்மைகள், விளையாட்டு உபகரணங்கள் (Puzzle, Word Building Board, Alphabet Blocks) என்பனவும் லண்டனில் உள்ள நூலகவியலாளர் என்.செல்வராஜா மற்றும் கனடாவில் வசிக்கும் இ.சித்திரஞ்சனி போன்றோரிடமிருந்து அன் பளிப்பாகப் பெறப்பட்டு, 'பொம்மை நூலகம்' அமைக்கப்பட்டது. அதன் மூலம் சிறுகுழந்தைகளும் நூலகத்தினை பயன்படுத்துவதற்கு ஆர்வம் கொண்டனர்.

---

**Corresponding Author:* சு.ஜெயலக்சுமி, சுன்னாகம் பொது நூலகம், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், இலங்கை. Email: sjeya403@gmail.com

**சிறுவர் நூல்களின் நவீன வடிவங்கள் அறிமுகம்**

சிறுவர்களைக் கவரக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட, பல்வேறு வடிவங்களையுடைய நூல் களின் சேகரிப்பு, Books Abroad நிறுவனம் (லண்டன்), மற்றும் திரு.பத்மநாபஐயர் (லண்டன்) அவர்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டது.

**சித்திர வகுப்பு**

2020ஆம் ஆண்டிலிருந்து சிறுவர்களுக்கான சித்திரவகுப்பு இந்நூலகத்தில் நடைபெற்று வருகின்றது. அதன் மூலம் சிறுவர்கள் ஆசிரியர் வரும்வரை தமது பொழுதினை சிறுவர் பகுதியில் நூல்களுடன் செலவிடுகின்றனர். அதன் மூலம் நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று வாசிக்கத் தூண்டப்பட்டு அங்கத்தவர்களாகவும் இணைந்துள்ளனர். இவ்வாறு இணைப்பாட விதான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் நூலகத்திற்கான சிறுவர்களின் வருகை அதிகரித்துள்ளது.

**சிறுவர் வாசிப்பு வட்டம்**

சிறு வயதிலேயே சிறுவர்களிடம் வாசிப்பை அறிமுகப்படுத்தி மேம்படுத்தும் நோக்கில் 2021ஆம் ஆண்டு 'சிறுவர் வாசிப்பு வட்டம்' உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் 22 சிறார்கள் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் ஏனைய சிறார்களை வழிநடாத்துவர். அதன் மூலம் சிறுவர்களின் ஆளுமைகளை வெளிக்கொணரவும் வாசிப்புச் செயற்பாட்டை விரிவாக்கவும், தலைமைத்துவப்பண்பை உருவாக்கவும் முடியும் இச் சிறுவர் வாசிப்பு வட்டத்திற்கு நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களே நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தவும் நடாத்தவும் சிறுவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 'முத்திரை சேகரித்தல்' எனும் அருகிவரும் பொழுதுபோக்கினை அவர்களிடையே அறிமுகப்படுத்தி, அவர்களையும் சேகரிக்கப் பழக்கி, மற்றும் தம்மிடம் உள்ளவற்றை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் மனப்பாங்கும் ஏற்படுத்தப்பட்டது. அதனூடாகப் பகுப்பாக்கச் செயற்பாடு தொடர்பில் முத்திரைகளை மலர்கள், பிராணிகள், தலைவர்கள் எனத் தரப்படுத்தி ஒழுங்குபடுத்தும் திறன்கள் வளர்ச்சியடைய வாய்ப்பு வழங்கப்பட்டது. சிறுவர் வாசிப்புவட்ட உறுப்பினர்களின் சொந்த ஆக்கங்களை தாங்கி "முகிழ்" எனும் சஞ்சிகை 2022ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு சிறுவர் புத்தக தினத்திலும் (ஏப்ரல் 02) வெளிவருகின்றது. இதன்மூலம் எதிர்கால எழுத்தாளர்கள் உருவாக்கப்படுகின்றார் கள். இச்சஞ்சிகையானது நூலக வளங்களைப் பயன்படுத்தியே அச்சிடப்பட்டு வருகின்றது.

**முன்பள்ளி இணைப்பு**

நூலகத்திற்கு அண்மையிலுள்ள முன்பள்ளி மாணவர்களை மாதத்திற்கு ஒரு தடவை நூலகத்திற்கு அழைத்து அவர்களின் ஒருநாள் கற்றல் நடவடிக்கையினை நூலக சிறுவர் பகுதியில் மேற்கொள்ள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**ஆரம்பப் பாடசாலைகள், முன்பள்ளிகள் தோறும் வகுப்பறை நூலகம்**

வலிகாமம் தெற்கு பிரதேச ஆரம்பப் பாடசாலைகள், முன்பள்ளிகள் தோறும் வகுப்பறை நூலகத்தினை அமைக்க, நூலகத்திற்கு அன்பளிப்பாக கிடைத்த மேலதிக சிறுவர் நூல்களை வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

**சிறுவருக்கான கதைநேரம், போட்டிகள் நடாத்துதல்**

வாசிப்புப் போட்டிகள், நடமாடும் சேவைகள், கதைநேரம் என்பனவும் நடாத்தப்படுகின்றன. சிறார்களுக்கான கதைகள், பாடல்கள், என்பன இறுவட்டுக்கள் மூலம் காட்சிப்படுத்தப் படுகின்றன. இதன் மூலம் சிறார்களின் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர் நூலகம் திறம்பட நடாத்தப்படுகின்றது. அத்தோடு சிறார்களுக்கான ஆரம்பமட்ட கணினிப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

இச்செயற்றிட்டத்திற்கமைவாக சிறுவா் வாசிப்புவட்ட செயற்பாடானது தொடர்ந்து நான்கு வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. ஒவ்வொரு வருடமும் நிர்வாகம் மாற்றப்பட்டு புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. 'முகிழ்' சஞ்சிகையின் மூன்றாவது இதழ் 2024இல் வெளிவந்துள்ளது. சித்திர வகுப்பு தொடர்ந்து ஐந்து வருடங்களாக நடைபெறுகின்றது. இவ்வருடமும் நாற்பத்தொரு சிறார்கள் இணைந்து கொண்டுள்ளனர். முன்பள்ளி மாணவர்களும் தொடர்ந்து நூலகத்தினை பயன்படுத்து கின்றனர். பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் போன்றவற்றிற்கு சென்று நூலகம் பற்றிய விழிப்புணா்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதனால் ஆரம்பத்தில் காணப்பட்ட சிறுவர் வாசகா் தொகை தற்போது 685ஆக அதிகரித்துள்ளது

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

இன்றைய காலகட்டத்தின் தேவை கருதி அருகிவருகின்ற சிறார்களின் வாசிப்பு பழக்கத்தினை இவ்வாறான பல்வேறு செயற்திட்டங்களினூடாக இந்நூலகம் மேம்படுத்தியுள்ளது. கவர்ச்சிகரமான தரமான சிறுவர் நூலகங்கள் சிறுவர்களிடையே வாசிப்பை மேம்படுத்துவதற்கு சிறந்த ஒரு வழியாக அமையும்.

மேற்குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் மூலம் சிறுவர்களிடையே வாசிப்பு ஆர்வம் அதிகரித்துள்ளது. அத்துடன், நூலகப் பாவனையும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நடமாடும் நூலக சேவைக்கான வாகனத்தைப் பெற்றுக்கொள்ளுமிடத்து அயல் பிரதேசங்களுக்கும் இந்நூலக சேவைகளை விஸ்தரித்துக்கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** சிறுவர் நூலகம், பொம்மை நூலகம், வாசிப்புப்பழக்கம்